1973 ஆகஸ்ட் 9] *[திரு. கே. எம். சுப்பிரமணியம்]*

About the provision of housing for Harijans in villages, I know that the money has been misspent and the contractors who have been entrusted with this work, have gone away without completing it. Also, many Panchayat Unions which have been entrusted with this work, have not carried it out. Why? Because there is no drive by the persons concerned. The entire drive or energy is directed against killing the Opposition. This is not democracy. Excuse me for saying that this is absolute autocracy. They must get out of it for Heaven's sake. That is all I wanted to say.

(4) நடைமுறைக் கேள்விகள் (தொடர்ச்சி).

(ஆ) பேரவைத் துணைத் தலைவர் அவைக்கு வராமை குறித்து.

திரு. முனு ஆதி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, தாங்கள் இல்லாத நேரத்தில் பானல் ஆப் சேர்மன்-ல் திரு. வீராசாமி அவர்கள் மட்டுமே இருந்திருக்கிறார்கள். மற்ற பானல் ஆப் சேர்மன்-ல் யாரும் இல்லை. இன்னொன்று சொல்லப் படுகிறது. துணைத் தலைவர் அவர்களால் ராஜிநாமாக் கடிதம் கொடுத்து விட்டதால் சபைக்கு வரவில்லையா என்பது இந்த அவைக்குத் தெரியவேண்டும் என்று நான் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

திரு. இராம அரங்கண்ணல்: நானும் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறேன். எனக்கு ஒரு சந்தேகம். நண்பர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் சபையில் இருந்து ராஜிநாமா செய்துவிட்டதாக ஒரு தகவல் எனக்கு. அது உண்மையா?

திரு. கே. எம். சுப்பிரமணியம்: மினிஸ்ட்டர்களின் போர்ட் போலியோக்கள் மாறியிருக்கின்றன. யார் யாருக்கு என்னென்ன போர்ட்போலியோஸ் என்று தெரியவில்லை.